ஞானபாநு.

VOL. 3. தொகுதி. 3. | June 1915. ராக்ஷஸஸூ ஆனி மீ | No. 3 பகுதி 3

காலஞ்சென்ற ஸ்ரீமதி மீனாட்சியம்மாள்.

நமது "ஞானபாநு" வின் பதிப்பாசிரியும் சொந்தக்காரியுமான ஸ்ரீமதி மீனாட்சியம்மாள் சென்ற வைகாசி மீ இரண்டாந் தேதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு மகாசக்தியில் இரண்டறக்கலந்து கொண்டாளென்ற விசனகரமான சம்பவத்தை நமது வாசகர்களுக்குத் தெரிவிக்கின்றோம். இவ்வம்மையார் ஸ்ரீ சுப்பிரமணிய சிவத்தின் மனைவியென்பதை அநேகமாக எல்லோரும் அறிவர். ஸ்ரீ. சுப்பிரமணிய சிவம் தேசபக்தி மேலீட்டால் சிறைவாசஞ் செய்ய நேர்ந்த காலத்தில் இவ்வம்மையார் பட்டகஷ்டங்கள் பல. இவ்வம்மையார்க்கு இறக்கும் பொழுது வயது 27. ஸ்ரீ சுப்பிரமணிய சிவம் சிறுபிராயம் முதற்கொண்டே வேதாந்தவிசாரணை செய்ய ஆரம்பித்து இகலோக இன்பங்களை வெறுத்து, சாதுக்களுடனும் சந்நியாசிகளுடனும் சகவாசம் செய்துகொண்டு ராஜ்ய சஞ்சாரம் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது இவ்வம்மையார் தமது தாயாரைத் துணையாகக் கொண்டு மற்ற சுற்றத்தினரை யெல்லாம் வெறுத்து, புருஷனேகதி யென்ற பதிவிரதா தர்மத்தைப் பரிபாலனஞ்செய்யக் கங்கணங் கட்டிக்கொண்டு, புருஷன் இருக்கும் இடங்களைத் தேடித் தேடிச் செல்ல, ஸ்ரீ சிவம் "நானவர் வலைபிற்பட்டுக் கைதப்பி யோடுமான் போல்" தமது மனைவியை அநேக இடங்களில் அநேக தடவைகளில் ஏமாற்றி நழுவிவிட, இவ்விதமாக இவ்வம்மையார் தமது புருஷனைத் தொடர்ந்து பட்ட கஷ்ட

நஷ்டங்கள் ஆச்சரியத்தையும் அநுதாபத்தையும் விளைவிக்கத்தக்கன. இவ்வாறாக வெல்லாம் ஸ்ரீ சிவம் பல தடவைகளிலும் பல விதத்திலும்வெறுத்துத்தள்ளியும் சரீரத்தை விடாத சாயையைப்போல, இவ்வம்மையார் தமதுபுருஷனை விடாதுபற்றித் தியானித்துக் கொண்டிருக்க, 1908-ம் வருஷத்தில் மகா சக்தியின் ஆக்ஞையின் பிரகாரம் ஸ்ரீ சிவம் சிறைவாசம் செய்யுமாறு நேரிட்டது. அப்பொழுதும் இவ்வம்மையார் அவரை விடாதுசிறைச்சாலை யதிகாரிகளின் மூலமாக அவருக்கு வேண்டியசௌகர்யங்களை யெல்லாம் செய்துகொடுத்து அவருடைய விடுதலை நாளை எதிர்பார்த்துக்கொண்டே காலங்கழித்தார். அப்பொழுது இவ்வம்மையார பட்ட கஷ்டங்கள்பற்பல ஸ்ரீசிவம்இயற்கையிலேயே சந்நியாச நோக்குடையவராயினும், இவ்வம்மையார் ஆதிமுதல் தம்மைவிடாது பின்பற்றித் தம்முடைய பதிவிரதாதர்மத்தைப்பரிபாலனம் செய்து வந்ததால் இவ்வம்மையாருடன் கூடி இல்லறத்தில் வாழ இசைந்து, தமது விடுதலைக்குப்பின் சென்ற இரண்டரை வருஷ காலமாக வாழ்ந்துவந்தார். இவர்களுக்கு இகபரசாதனமாக இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீசிவம் ராஜாங்கத்தாரால்சந்தேகிக்கப் பட்டவராதலால், பத்திரிகை நடத்துவதற்கு உத்தரவுகிடைப்பது சந்தேகம் என்றுகருதி, ஸ்ரீமதிமீனாட்சியம்மாள் பேரால் பத்திரிகை நடத்துவதற்கு ராஜாங்கத்தாரிடமிருந்து அநுமதி பெறப்பட்டது. சென்ற இரண்டு வருஷகாலமாகப் பத்திரிகை இடையூறின்றி நடைபெற்றுவந்தமைக்கு முக்கிய காரணம் இவ்வம்மையாரின் ஆக்கிரமும் தூண்டுதலுமேயாம். இப்பொழுது இவ்வம்மையார் மகாசக்தியில் லயமாகிவிட்டார். தேசநன்மைக்கும் உலகமுன்னேற்றத்திற்கும் பாடுபடும்தம்முடைய புருஷனுடைய கைங்கர்யங்களும் மற்றத் தேசாபிமானிகளுடைய கார்யங்களும் இனிதுநிறைவேறுமாறு இவ்வம்மையாரின்சக்தி அருள்புரிவதாக.

ஓர் அறிவிப்பு.

இப்பத்திரிகையின் பதிப்பாசிரியையாயிருந்த ஸ்ரீமதி மீனாட்சியம்மாள் காலஞ்சென்று விட்டபடியால், அடுத்த பத்திரிகை வெளியிடுவதற்கு முன் அரசாங்கத்தாரிடத்திருந்து அநுமதி பெறவேண்டியது அவசியமாயிற்று. ஆதலால் ஸ்ரீ சுப்பிரமணிய சிவம் சென்னை பிரதான பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டுக்கு இவ் விஷயத்தைக் குறித்து மனுச்செய்துகொள்ளவே, வைகாசி மீ 26ம் தேதி யன்று தான் "ஞானபாநு" மேலும் நடத்தப் பெறுதற்கு அவரைப் பதிப்பாசிரியராக மாஜிஸ்ட்ரேட் ஒப்புக்கொண்டு அநுமதி யளித்தனர். ஆதலால் இனிமேல் "ஞானபாநு"வின் சொந்தக்காரரும் பதிப்பாசிரியரும் பத்திராதிபரும் ஸ்ரீ சுப்பிரமணிய சிவமேயாவர். மாஜிஸ்ட்ரேட்டிடமிருந்து அநுமதி கிடைப்பதற்கு இத்தனை நாட்களாய்விட்டனவாதலால், பத்திரிகை சிறிது தாமதித்து வெளிவருகின்றது. அதனை வாசகர்கள் மன்னிப்பார்களென்று நம்புகிறோம். அடுத்த மாத முதல் பத்திரிகை தவறாது குறித்தகாலத்தில் வெளிவரும்.

பத்திராதிபர்.

நமது மதம்.

கண்ணிற் காண்பதுன் காட்சிகை யாற்றொழில்
பண்ணல் பூசை பகர்வது மந்திரம்
மண்ணொ டைந்தும் வழங்குயிர் யாவுமே
அண்ண லேயுன் னருள்வடி வாகுமே.

என்று ஸ்ரீதாயுமானவர் பாடியருளினர்.

கண்களால் காண்பதெல்லாம் உனது தர்சனமே; செய்யுந் தொழில்களெல்லாம் உனது பூசையே; பேசுவதெல்லாம் உனது ஸ்தோத்திரமே. ஈஸ! பஞ்சபூதங்களும் சமஸ்தகோடி ஜீவராசிகளும் உனது கிருபாவடிவமாகும். இதுவே மேற்கூறிய பாட்டின்பொருள். இக்கருத்தே நமது சகல வேதசாஸ்திரங்களிலும் கோஷிக்கப்பட்டிருப்பது. ஆ! ஆ! பார்ப்பதெல்லாம் ஈசன், செய்வதெல்லாம் ஈஸ்வரபூஜை. நீ காட்டிற்சென்று விறகு வெட்டினைலும், கலப்பை பிடித்து உழுதாலும், ஈஸ்வரபூஜையாகவே

நினைத்துச் செய். ஏதாவதொருதினத்தன்று எங்கேயாவது ஓரிடத்திற் சென்று பிரார்த்தனை செய்வதாகப் பாவிப்பதை நமது மதம் போதிக்கின்றதில்லை. ஜனசமூகநீதிகளையும், ராஜவியவகாரங்களையும், கைத்தொழில் வியாபாராதி விஷயங்களையும் நமது மதம் புறக்கணிக்கின்றதில்லை. நாம் ஆகாரம் உண்ணுவதும் படுத்துறங்குவதும் நமது மதத்தை ஆதாரமாகக்கொண்டுதான். ஆனால் அவசியமான காரியங்களில் நமது மதபோதனையை அலட்சியம் செய்து அநாவசியமான விஷயங்களில் நாம் மூடப்பிடிவாதம் கொள்கிறோம். அதனால் தான் நாம் எடுத்த காரியங்களிலெல்லாம் இடறிவிழுகின்றோம். ஏ! சகோதரா! நீ ஏன் ஈஸ்வரனை உன்னிடத்தினின்றும் மற்றவர்களிடத்தினின்றும் பிரித்துவைக்கிறாய்? சர்வவியாபக லட்சணத்தை ஈஸ்வரனுக்களித்து ஆனால் அவரை எல்லாவிடங்களினின்றும் துரத்தி எங்கேயாவது ஓரிடத்தில் அடைத்து விடுகிறாய். சூர்யப்பிரகாசமானது பார்ப்பானுக்கும் பறையனுக்கும் சமமாயிருக்கின்றதல்லவா? அதுபோலவே, ஈஸ்வர சைதந்நியப்பிரகாசத்தில் ஜாதிபேதம் ஏது? ஜனபேதம் ஏது? இனபேதம் ஏது? எல்லாம் ஈஸ்வராம்சம். நட்சத்திர மண்டலம், சூர்யமண்டலம் முதலிய மண்டலங்களுக்கு மேலே ஏதோ ஒரு மண்டலம் இருக்கின்றதென்றும், அம்மண்டலத்திற்குச் செல்வது தான் மோட்சமென்றும், ஆகாயத்திலே அந்தரத்திலே ஓர் உருவமாக ஈஸ்வரன் இருக்கின்றாரென்றும் நமது மதம் போதிக்கின்றதில்லை. பற்றுக்களினின்றும் விடுபட்டு, பந்தநிவிர்த்தியடைந்து சர்வஸ்வதந்தரத்துடன் தனிக்காட்டுச் சிங்கம் போல நிகரற்றுத் தன்மயானந்தத்தை அநுபவிப்பதே மோட்சம் எனப்படும். ஈஸ்வரன் சர்வாத்ம வஸ்துவாய் சமஸ்தகோடி ஜீவராசிகளாய் விசிரிம்பித்திருக்கிறார். ஆதலால் ஈஸ்வரனைத்தவிர வேறு பொருளேயில்லை. செய்கைகளனைத்தும் ஈஸ்வரபூஜையே.

* * *

மோட்சமடைதற்குச் சர்வ சங்க பரித்தியாகம் செய்வது அவசியமென்று நமது முன்னோர்கள் கூறியுள்ளார்கள்; சர்வ வஸ்து பரித்தியாகம் என்று அவர்கள் கூறவில்லை. ஆதலால் ஈஸ்வர சிருஷ்டியிலடங்கிய சகல வஸ்துக்களும் நமக்கு அவசியமேயாகும்; ஆனால் ஜீவசிருஷ்டியினாலேற்படும் சங்கத்தை, அதாவது பற்றுதலை, நாம் விட்டுவிடவேண்டியது. உலகப்பொருள்களை நாம் விட்டுவிட்டு எங்கேயாவது ஓடிவிடவேண்டுமென்று நமது மதம் போ

திக்கவில்லை. ஆனால் எல்லாப் பொருள்களையும் ஈசுவரனாகக் கருதிவிடவேண்டும்; பின்னர் ஆசைதீர அநுபவிக்கவேண்டும். இதுவே நமது மதம். எந்தப்பொருளை, எந்த விஷயத்தை, ஈஸ்வரனிடத்தினின்றும் நாம் பிரிக்கமுடியும்? பிரித்தால் பொருள் விளக்கமும் விஷய விளக்கமும் எப்படியுண்டாகும்? விளக்கத்திற்கு வித்து ஈஸ்வரனன்றோ?

*   *   *

உலக வியவகாரமென்றாவது, ஈஸ்வரபூஜையென்றாவது தனிப்பட்டு ஒன்றுமில்லை. உலகவியவகாரமெல்லாம் ஈஸ்வரபூஜையே. செய்வன திருந்தச் செய். மூலையில் உட்கார்ந்துகொண்டு முணுமுணு என்று நாவினால் ஜெபஞ் செய்துகொண்டே மனத்தில் காமக்குரோதாதி நினைப்புக்களைக்கொண்டிருத்தல் இழிவானதன்றோ? நமது தேசத்திலுள்ள சாஸ்திரிகளுள் பெரும்பான்மையோர் பூஜாகாலத்தில் கையினால் மணியையாட்டிக்கொண்டே சுற்றியிருப்பவர்களுடன் ஊர்வம்பு "அளந்து"கொண்டு பூஜை புரிதலைக் காணலாம். இத்தகைய பூஜை ஆஷாடபூதிவேஷமாகும்; அஞ்ஞான கார்யமாகும். நீ உனது முழுமனத்தையும் எந்த வேலைசெய்துகொண்டிருக்கிறாயோ, அந்த வேலையினிடத்திற் செலுத்து; அதை ஈஸ்வர கைங்கர்யமாக எண்ணித் திரிகரண சுத்தியாக நீ வேலை செய்வாயானால், அந்த வேலையின் பயன் இத்தகையதென்றும் அதனாலுண்டாகும் ஆநந்தம் இவ்வளவினதென்றும் நீ அறிவாய்.

*   *   *

ஒரு சமயத்தில் ஓரிடத்தில் கண்ணை மூடிக்கொண்டு முணுமுணுப்பதை நீ ஈஸ்வரத்தியானமென்று கருதினால், மற்றவேளைகளில் நீ ஈஸ்வரனை மறந்திருக்கிறாயென்று தானே கூறவேண்டும். ஈஸ்வரன் மற்றவேளைகளில் எங்குச் சென்றுவிட்டார். லௌகிக வியவகாரங்களை ஈஸ்வரகைங்கர்யத்தினின்றும் வேறாகக்கருதிநடப்பதினாலேயே, நமது தேசம் இத்தகைய தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிட்டது. சகோதரா! கைத்தொழிலில் முயற்சி செய்; வியாபாரத்தை விருத்தி செய்; ராஜரீகக் கல்வியில் தேர்ச்சியடை; ஓடி விளையாடு; சரீரத்தை வலுவாக்கு; சாஸ்திரங்களையெல்லாம் கற்றுக்கொள்; உலக விஷயங்களில் உயர்ந்து நில்; ஆனால் ஜாக்கிரதை! மேல் நாட்டினரைப் போல இவ்வுலக விஷயங்களை உலக விஷயங்களாகவே கருதி மயங்கிவிடாதே; இவற்றையெல்லாம் ஈஸ்வர சொரூபமாகக் கருது.

*   *   *

ஏழைகளுக்கு இரங்கு; ஈஸ்வரன் ஏழைகளிடத்தில் தான் மிகுந்து பிரகாசிக்கிறார். பர்வதங்களின் மேல் பொழியும் மழை ஜலமானது அப்பர்வதங்களில் தங்காமல் அருவிகளாயோடிப் பள்ளங்களாயுள்ள இடங்களைத் தேடியோடிவருகின்றன; அதுபோலவே ஈஸ்வர சைதந்யமும் தனவந்தர்களிடத்தும் அதிகார புருஷர்களிடத்தும் பிரகாசிப்பதாகக் காணப்படினும், ஏழைகள், துன்பப்படுபவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், கீழோர் இவர்களைத்தேடியோடிவந்து இவர்களிடமே மிகுந்திருக்கும் ஒதிபோலப் பருத்து உத்தரம் போல நீண்டு தடித்துக் கொழுத்திருக்கும் பிராமண நாமதாரிஒருவன் எந்த நேரத்தில் வந்தாலும் அவனுக்கு ஆசார உபசாரம் செய்து அன்னமளிப்பதும், இப்பொழுதோ பின்னரோ உயிர் விடுவதற்குக் காத்துக்கொண்டிருக்கும் சூத்திர நாமதாரிக் கிழவி பொருத்தி வாசலில் பிச்சைக்கு வந்து நின்றால் "இன்றைக்குப் பிச்சையிடலாகாது" என்று சொல்லி அவளை விரட்டித் துரத்துவதும் நமக்குள் வழக்கமாயிருக்கின்றது. நீ அப்படிச் செய்யாதே. நீ புதுமைகளைக் கற்பிக்கவும்செய்பவும்பிறந்தவன். ஆனால் பழைமைகளில் சிரேஷ்டமானவையும் சிறந்தவையுமான எல்லாவற்றையும் பார். இப்பார்வையின் மேல் உனது நீதிகளை ஏற்படுத்து. உள்ளது ஒன்றே; அஃது எங்கும் எப்போழுதும் உள்ளது.

அக்நி ஸ்தோமம்.

(ருக் வேதம். 5-2)

அத்ரி மஹரிஷி செய்தது.

(முன்னுரை:—மனிதனுக்குள்ளே பரமாத்மாவின் சக்தி திகழ்கின்றது. ஸாமாந்ய நிலையில் அது மனிதனுடைய அறிவிலே தோன்றாமல் கீழ்நிலத்தில் மறைந்து கிடக்கின்றது. இயற்கை என்ற தாய் அதனை வயிற்றுக்குள் வைத்து மூடிக்கொண்டிருக்கிறாள். பகுதி, பிரிவு, சிறுமை புணர்ச்சி- இவையிருக்குமளவும் இந்தச் சக்தி ஒளிதராமல் மறைந்திருக்கும். "பெருமைக் காட்சி" என்று சொல்லப்படும் பேரறிவு கிடைக்குமானால் அங்கே இந்தச் சக்தி வெளிப்படப் பிறந்துவிடும். இந்தச் சக்தியை வேதம் அக்நி-தேவன் என்று கூறும். இனி, அஞ்ஞானத்தின் கட்டுக்களை ராக்ஷஸ மாயைகள் என்று சொல்லப்படும். நமது அறிவுக் கதிர்களை ராக்ஷஸர் கவர்ந்து கொண்டனர். அக்நி-சக்தி தோன்றி ராக்ஷதரை அழித்து அவற்றை மீட்டிக்கொடுத்து நமது யாகத்தை நிறைவேற்றி நமக்கு மஹாசாந்தி தரு

கின்றது இவையெல்லாம் பின்வரும் மந்திரங்களிலே தெளிவாகச் சொல்லப்படுகின்றன.)

யுவதியாகிய தாய் மகனைத் தந்தையிடம் கொடாமல் தன்னுள்ளே மறைவாக அழுத்தி வைத்திருக்கிறாள். எனினும் இம் மகன் வலிமை குறைபவில்லை. ஏறுகின்ற வேள்வித்தொழிலிலே அவன் பதிவுற்றிருப்பதை ஜனங்கள் தம் முன்னே காண்கிறார்கள். 1

(தாய்-இயற்கை. மகன்-அக்கி-சக்தி. தந்தை-தூய அறிவ.)

இளம்பெண்ணே! நீ பகுதிகளில், இவனைச் சுமந்துகொண்டு நினது பெருமைக் காட்சியிலே பிறப்பிக்கின்றாய். இம்மகன் யார்? பல்லாண்டுகளாகக் குழந்தை கருவிலே வளர்ந்தான். அவனைத் தாய் பெறும்போது நான் கண்டேன். 2

தொலையிலே, கொல்லை நிலத்தில், பொன்னொளி வீசும் பற்களையுடையவன். மாசற்றவண்ணமுடையவன். அவன் படைகள் சமைப்பதைக் கண்டேன். எனது பகுதிகளில் உள்ள அமுதத்தை அவனுக்குக் கொடுத்து விட்டேன். இனி என்னை இந்த ராக்ஷஸர், வேதமில்லாதவர், தெய்வ-அறிவில்லாதவர் என்ன செய்ய முடியும்? 3

(கொல்லை நிலம்-உணர்வு நிலத்தின் பின்னேயுள்ளது. அண்டத்திலும் பிண்டத்திலும் மூன்று நிலங்கள் உள்ளன. இவற்றை ஏழாக வகுத்து "ஸப்த லோகங்கள்" என்பது மூண்டு.)

கொல்லை நிலத்தில் இடைவிடாது பலவகைப்பட்ட கதிர்களுடன் செல்வதோர் பசுமந்தைபோன்றதைக் கண்டேன். அவற்றை இனி யாரும் பிடித்துவைக்க மாட்டார்கள். அவன் பிறந்துவிட்டானன்றோ? அவற்றுள் வயதாகியிருந்தனவெல்லாம் மீட்டும் இளமைபெற்று விட்டன. 4

(கதிர்கள்-எமது அறிவுக் கிரணங்கள்- இவற்றை ராக்ஷஸர் பிடித்து வைத்திருந்தார்கள். அக்கி-சக்தி பிறந்தவுடன் இவை மீட்டும் நம்மிடத்தே வருகின்றன)

இக்கதிர்களினின்றும் என்னை வலிமையாகப் பிரித்து வைத்தோர் யாவர்? அப்போது நமது காவலன், நமது போராளி பிறக்கவில்லை. அவற்றை என்னிடமிருந்து கவர்ந்தோர் மீட்டும் என்பால் விட்டுவிடக்கடவர். நான் இழந்துவிட்ட ஒளிகளையெல்லாம் அவன் திரும்பவும் அறிவினாலே கொணர்ந்து தருகின்றான். 5

உயிர்களிலே இருப்போரின் அரசன் உயிர்களுக்கு இருப்பிடமாவோன் — அவனை இன்பமற்ற நமது பகைவர் மனிதருக்

குள்ளே ஆழ அமிழ்த்தி வைத்திருக்கிறார்கள். அத்ரியின் வேதங்கள் அவனை வெளிப்படுத்துக. அவனை அடைத்துவைத்தோர் தாம் அடைபடுக. 6

(அத்ரி—ரிஷியின் பெயர். இச்சொல்லுக்கு 'அனைத்தையும் தின்று சுவைப்போன்' என்பது பொருள்.)

முன்பு சுனசேபன் என்பவனை ஆயிரம் யூபத்தூணிலே கட்டியிருந்தார்கள். நீ அவனை விடுதலை செய்வித்தாய். அவன் சாந்தி பெற்றான். எம்மிடமுள்ள அக்நி-சக்தியே! எமது யாகத்தின் தலைவனே! அங்ஙனமே நீ இங்கு வீற்றிருந்து, எம்முள்ளே அறிவு பெற்று எமது கட்டுக்களையும் விடுவிப்பாய். 7

எம்மீது சினந்துபோய்விடலாகாது. தேவர்களின் நோன்பு காப்போன் உன்னைக் குறித்துச் சொன்னான். இந்திரன் உணர்ந்தவன். அவன் உன்னை விழிகளால் பின்பற்றினான். அவனிடம் அறிந்துகொண்டு, தீயே, உன்னை அடுத்தேன். 8

(இந்திரன்-அறிவுத்தேவன்)

தீ விரிந்து பெருகிய ஒளியுடன் சுடர்கின்றான். தனது பெருமையால் அனைத்தையும் வெளியுறக் காட்டுகின்றான். தீயநடை கொண்ட ராக்ஷஸமாயைகளையெல்லாம் வெல்லுகின்றான். ராக்ஷஸனைக் கொல்வதற்காக இரண்டு கொம்பையும் தீட்டுகின்றான். 9

வானத்திலே தீ செய்யும் முழக்கங்கள் ராக்ஷஸனை அழிப்பதற்குக் கூரிய படைகளாகுக. வெளியிலே இவனுடைய வெம்மைகொண்ட கதிர்கள் எதிர்ப்பதையெல்லாம் உடைத்துக்கொண்டு முன்னேறுகின்றன. ராக்ஷஸத் தடைகள் இவனைக் கட்டுவதில்லை. 10

உள்ளொளி பெற்றவனும், தீரனும், செய்கையிலே தெளிந்தவனுமாகிய நான்—தீயே, பல வடிவங்களில் பிறந்திருப்பவனே, நினக்கு இந்த ஸ்தோமப்பாட்டை ஒரு தேராகச் சமைத்துக் கொடுத்தேன். தீயே! தேவனே! நீ எம்மிடத்து எதிர்மகிழ்ச்சி கொள்வாயானால் அதினின்று நாங்கள் வானொளியேற்ற நீர்ப்பெருக்கைப்போல், அறிவொளியேந்திய உயிர்வெள்ளத்தை வெல்லக் கடவோம். 11

வலிய கழுத்தினையுடையதோர் ஏறுபோன்றான்-அவன் எம்முள்ளே வளர்ந்து பகையற்ற அறிவை எமக்குக் கொண்டு தருகின்றான். சாதலில்லாத தேவர் தீயினிடம் இவ்வாறு சொல்லினர்:—"தீயே! வேள்விநிலமாகி விட்ட மனிதனுக்குச் சாந்தி தருக. அவியை ஏந்தி நிற்கும் மனிதனுக்குச் சாந்தி தருக." 12

சி. சுப்பிரமணிய பாரதி.

தமிழ் நாட்டுக் கிராமக் கவிதை.

(இது பழய பத்திரிகைகளுள் ஒன்றிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது.)

உலக சரித்திரத்தில் எந்த ஜாதியிலும் ஸாஹித்யமே (முக்கியமாய்க் கவிதையே) ஜாதீய லட்சியங்களையும் விருப்பங்களையும் அதனது ஆவசியங்களையும் கண்ணாடிபோற் பிரதிபலித்துக் காட்டுவதாயிருக்கின்றது. ஒரு தேசத்தின் கவிதையானது தேசிய நோக்கம் எவ்வாறமைந்திருக்கிறதோ, அவ்வாறே அமைகின்றது. பரதகண்டத்தில் "தர்மம்" என்பதே எல்லாவற்றிற்கும் மூலாதாரமாயிருப்பதால், மத சம்பந்தமான விஷயங்களைப்பற்றியே கவிதைகள் செறிந்து கிடக்கின்றன. ஆகவே தமிழ்நாட்டுக் கிராமப் பாடல்கள் முக்கியமாக மத சம்பந்தமான விஷயங்களையும் ஆத்மார்த்தமான விஷயங்களையும்பற்றியுமே மிகுதியாயிருக்கின்றன. ராஜதந்திரம், ஜனசமூக சாஸ்திரம் இவைகள் போன்ற லௌகிக விஷயங்களிலே ஆழ்ந்து கிடக்கும் ஏனைய தேசங்களைப்போலல்லாமல் தொன்று தொட்டு நம் பாரததேசம் ஆத்மவிசார சம்பந்தமான பிரவிர்த்தியைக் கையாண்டு வருகிறது. கிராமப்பாடல்களின் உபயோகம் கிராம வாழ்க்கையின் உள்ளும்புறமும் அறிந்தவர்க்கன்றி மேற்றிசை நாகரிகத்தில் மூழ்கியிருப்பவர்களுக்குத் தெரியாது.

தமிழ் நாட்டில் ஜனக்கவிதையை உண்டுபண்ணி அதை நாடு முழுதும் பாவச்செய்வதற்கு மூன்று வகுப்பார் இருக்கிறார்கள். அவர்களாவர்:—(1) தென்னாட்டுப் பெண்பாலர் (2) தென்னாட்டுப் பிச்சைக்காரர்கள் (3) தென்னாட்டுச் சாதாரண ஜனங்கள். இந்த மூன்று வகுப்பாராலுமே தென்னாட்டுப் பாடல்கள் மேற்றிசை நாகரிகமெனும் பெருவெள்ளத்தில் முழுகிப் போகாமல் தப்பிப் பிழைத்திருக்கின்றன.

தென்னாட்டுப் பெண்பாலர் ஜனக்கவிதையைத் தாங்களே உண்டுபண்ணியும் பரவச்செய்தும் இன்னும் பலவேறு விதமாக அதை விருத்தி செய்தும் தமிழ்நாட்டிற்கு அழியா உதவி செய்து வருகிறார்கள்.

"பெண்டுகள் சேர்ந்திடிற் பெரிய சண்டையே" என்றோர் பழமொழி சொல்வதுண்டு. ஆனால் தமிழ் நாட்டுப்பெண்கள் கூடி

விட்டாலோ—வேதாந்தப் பிரசங்கங்கள், வேதாந்தப் பாட்டுக்கள் முதலியன—எங்கிருந்தோ தோன்றி விடுகின்றன. இவர்கள் ஜனக்கவிகள் புனைவதில் வெகு தீவிரமாயும் சாமர்த்தியமாயும் அதைச் பரவச்செய்வதில் இன்னும் ஊக்கமாயும் இருப்பார்கள். ஜனக்கவிகளை அவர்கள் தம் குடும்பச் சிறுமியருக்கும் இதர சிறுமியருக்கும் சொல்லிக் கொடுத்து, அவைகளின் தாத்பரியத்தை அவர்களுக்கு விளக்குவார்கள். இவ்வாறு பலவிதமாகக் கவிதைத் தொகுதியை விருத்தி செய்ய முயற்சிக்கின்றனர்.

கிராமப்பாடல்களுக்குள் சாதாரணமாக மாதர்களுக்குள் வழங்கிவரும் "வளைத்து வருகிற பாட்டுக்கள்" என்று ஒரு வகை உண்டு. சாதாரணமாய் இவை ராமாயண மகாபாரதங்களையாவது, அல்லது துருவ சரித்திரம், அம்பரீஷ சரித்திரம் முதலிய புராணக்கதைகளையாவது விஷயமாகக் கொண்டிருக்கும் பாடல்கள். விசேஷ தினங்களில் கூடத்தின் மத்தியில் ஒரு குத்துவிளக்கை வைத்து அதைச்சுற்றிக்கிராமப்பெண்கள் வளைத்துவந்து கைகொட்டிக் குதிப்பார்கள். இவர்களிலொருத்தி அடியெடுத்துக்கொடுக்க மற்றவர்கள் அடியைத் திரும்பவும் இரைந்து பாடுவார்கள். இந்தப் பாட்டுக்கள் கட்டங் கட்டமாய்ப்பிரிக்கப்பட்டிருக்கின்றன; ஒவ்வொரு கட்டத்திற்கும் வெவ்வேறு ராகம். தென்னாட்டுப்பெண்களுக்கு மற்றெந்தப் பிரவிர்த்தியிலுமில்லாத ஊக்கமும் உற்சாகமும் வளைத்து வந்து பாடுகிறதென்றால் உதித்து விடுகின்றது.

இதைத்தவிர, வேதாந்தப் பாட்டுக்கள் அநேகமிருக்கின்றன; இந்த வேதாந்தப் பாட்டுக்களில் வேதாந்த உண்மைகள் கதாரூபமாகவோ, வேறெந்த ரூபமாகவோ அமைக்கப்பட்டு யாரும் அறியக்கூடிய எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. இவைகள் ஜனங்களின் உற்சாகத்தைக் கிளப்பி அவர்களுக்குப் புத்துயிர் ஈந்து ஊக்கத்தையும் உண்டுபண்ணுகிறது; இவ்வகைப் பாட்டுக்களில் அர்த்தபுஷ்டியுள்ளதும் மயிர்ச்சிலிர்ப்பெடுக்கச் செய்வதுமாய்,

"ஆட்டிமானே—அகண்டமென் றாட்டிமானே
ஆட்டிமானே யநுபோகம் நானே"

என்னும் ஒரு பாட்டு இருக்கிறது. அந்தப் பாட்டைக்கேட்ட மாத்திரத்தில் ஆங்கில மொழியிலழுந்தி இந்திய ஹிருதயத்தின் ஆழ

த்தைத் தெளிவாயறியச் சக்தியில்லாதவனும் கண்ணீர்மல்கித் தன்னையே மறந்து விடுவான். இவ்வகைப் பாட்டுக்களுக்கெல்லாம் நமது பாட்டியார்களே காப்பாளிகளாயிருக்கின்றனர். ஜாதீய கவிதை அவர்களால் போஷிக்கப்பட்டு தார்மாணத்தினின்றும் தவிர்க்கப்படுகின்றது பாட்டியர்களையும் "தில்லால"ப் பாட்டுக்களையும் பழிப்பவர்கள் ஜாதீய ஐதீகத்தை மறந்து பேடித்தனமாய்ப் பிதற்றி நிற்பவராவர். ஜாதீய ஸாஹித்தியத்தின் அருமையை அறியாமல் பிதற்றுபவர்களுக்கு நாம் வணக்கத்துடன் சொல்வதாவது:—"ஜாதீயக் கவிதையும் நீர் ஸதா நிந்தித்துக் கொண்டிருக்கும் பாட்டிகளும் "தில்லால"ப் பாட்டுக்களுமே தமிழ் நாட்டின் ஐதீகத்திற்கு மூலாதாரமாயிருக்கின்றன. அவைகளை நீக்கிவிட்டால், நமது பெருமைவாய்ந்த ஸாஹித்யம் முழுமையும் வேரற்றுவிழும்" என்பதே. இவைகளைத் தவிர விசேஷ சமயங்களில்பாடும் கிராமப்பாடல்கள் எவ்வளவோ இருக்கின்றன. உதாரணமாக நலங்குகள், பத்தியங்கள், ஊஞ்சல்கள் முதலிய பலவகைப்பாட்டுக்கள் கவனிப்பாரற்றுச் செறிந்து கிடக்கின்றன. மேனாட்டு விஷம் ஏற ஏற நம்நாட்டுப்பெண்டுகள்கூட இவைகளைக் "கர்னடகம்" என்று பழித்துக் கைவிட ஆரம்பித்து விட்டனர். "ஓடம்" அல்லது "கப்பல்" என்று ஒரு வகைப்பாடல் உண்டு. அவ்வகையில் கும்பகோணம் கலாசாலை வாழ்க்கையைப்பற்றிஒன்று விவரிக்கின்றது. வேதாந்த விஷயமான பாட்டுக்கள் நமது தமிழ் நாட்டுக்கே நந்தா விளக்காய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. அவைகளில் "பல்லி" "பாப்பு" "கிளி" முதலியவைகள் மற்றெல்லாவற்றைக் காட்டிலும் முக்கியமானவை. "பள்ளு" என்னும் ஒருவகைப்பாட்டு தென்னாட்டில் வழங்கப்பட்டு வருகின்றது. அவ்வகையைச் சேர்ந்த ஒரு பாட்டில் ஜீவனை ஒரு குடும்பிக்கு உபமானமாகச்சொல்லி, அவன் "வித்தையென்னும் கலப்பையால் "அஞ்ஞானம்" என்னும வயலையுழுது "அகங்காரம்" என்னும் களைகளைந்து—"ஸம்யோகம்" "ஆத்மஸ்வதந்திரம்"என்னும் பயிரை விளைப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. பெண்டுகள் பாடல்களைப்பற்றிப் பேசும்பொழுது "காவடிச்சிந்து" என்னும் வகையைச் சேர்ந்த பாடல்கள் முக்கியமாகத் தோன்றுகிறது. காவடிச்சிந்து பாடல் வகைகளில் ஒரு துறை அதில் ஜீவாத்மபரமாத்ம சம்பந்தத்தையும் விசேஷத்த ப்ரேமையையும் தலைவா தலைவியரின் காதலுக்கு ஒப்பிட்டிருக்கிறது. ஏனெனில் உலகத்தில்

செறிந்து கிடக்கும் வேற்றுமைத் தோற்றங்களின் மத்தியில் ஒற்றுமையை நிலைநாட்டி வைக்கும் "பிரேமை" என்னும் மூலசூத்திரத்திற்குத் தலைவர் தலைவியர் காதலைத்தவிர வேறு உபமானம் கிடையாது.

இனி பிச்சைக்காரப் பாட்டுக்களைக் கவனிப்போமானால் அவைகளிலும் ஆச்சர்யகரமானபாட்டுக்கள் இருக்கின்றன. இவைகளைப்பற்றி நிவேதிதா தேவி என்னும் கீர்த்திபெற்ற சந்நியாசினி பின்வருமாறு கூறுகின்றனர்:—"இப்படிப்பட்ட பிச்சைக்காரப் பாட்டுக்கள் ஏராளமாயிருக்கின்றன. இவை தெளிவாயும், அழகாயும் கீர்த்திக்கினிமையாயும் இருக்கின்றன. ஆகவே இந்திய தேசத்துப் பிச்சைக்காரன் கிராம ஜனக்கவிதை புனைந்து கிராம வாழ்க்கைக்கு மிக்க உதவி செய்கின்றான். இன்னும் இவன் கிராம ஜனங்களுக்கு வேதாந்த உபதேசம் செய்பவனாக இருக்கிறான்". இது தமிழ்நாட்டுப் பிச்சைக்காரன் விஷயத்தில் மிகவும் உண்மையே. பிச்சைக்காரர் பாட்டுக்களுக்குள் வேதாந்த விஷயமான பாட்டுக்களே அதிகம். அவைகளுக்குள் "ஐந்து கல்லாலொரு கோட்டை—அந்த ஆநந்தக்கோட்டைக்கு ஒன்பதுவாசல்" என்னும் பாட்டு கேட்பவர் மனதைக் கவரும் சக்தியுள்ளதாயும் இன்பவிசை பொருந்தியதாயுமிருக்கிறது. இப்பாட்டுக்கள் பெரும்பாலும் மோட்ச மார்க்கத்தில் அபிவிருத்தி சாகையை வளரச் செய்து பிதவாத சாகைகளை வேரறுத்து விடுகின்றன.

இவ்விரண்டு பெரு வகுப்புகளுக் குள்ளடங்கிய கவிதைகளைத் தவிர இவைகளைவிட மகாசக்தியுள்ளதும் ஜாதிய விருத்திக்கு உண்மையான ஊக்கமும், மார்க்கமும் கொடுப்பதான வேறொரு பெரிய வகுப்பிருக்கின்றது. இதுவே சாதாரண ஜனங்களுக்குள் வழங்கப்பட்டு வரும் பாட்டுக்கள். மறவர் பாட்டுக்கள், வில்லர் பாட்டுகள், வண்டிக்காரர் பாட்டுகள் முதலியன இவ்வகுப்பைச் சேர்ந்தவைகளே. இவை ஜாதீயஹிருதயத்தின்உண்மையான விராட் ஸ்வரூபத்தை தாழ்ந்த குலத்தோரென்றிருக்கும் சாதாரண ஜனங்களிடமே காணலாம். அங்கேதான் ஜாதி தேவதையின் மகா சக்தி அதன் பூரண பரிமாணத்தில் காணலாம். இச்சாதாரணப் பாடல்களே ஜாதீயஜீவிதத்திற்குச்சாகவதம் கொடுத்து அதை உறுதிப்படுத்துகின்றன. மனோபாவந்தளும்பி பொழுகுவதிலிருந்தும் ஹிருதயத்தில் ஒருவித ஆநந்தத்தையுண்டாக்கி அடக்கமுடியாத

ஆஹலாதத்தின்பேரில் உண்மையாயும் ஹிருதய பூர்வமாயும் ததும்பி நிற்கும் பாவமே கவிதா என்று சொல்லப்படுமானல் "தில்லாலா" பாட்டுப்பாடுபவனும்

"மச்சான் வருவாரென்று—நல்ல
மாலை தொடுத்து வைத்தேன்"

என்று பாடினவரும் கவிகளேயாவர். காலதேச வர்த்தமானங்கள் மாறிக்கொண்டு வரவர கவிதையும் மாறிக்கொண்டேவருகிறது. இப்பொழுது நம் பாரததேசம் முழுவதும் ஒரு பிரளயம் வரப்போகின்றது. நவசக்தி யென்றும் அணைகடந்த வெள்ளம் கேட்டையும் கேடுசூழ்வதனைத்தையும் தனது மகாசக்தியுள்ள வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகிறது. ஆதலால் இந்த நவசக்திக்கேற்றதான ஒரு கவிதா ஏற்படவேண்டியது அவசியம். ....காலசக்கிரம் சுழலச்சுழல, மாறுபாடு, மாறுபாடு. இதுவே பிரகிருதியின் தொழிலாய், "பழையன கழிதலும் புதியன புகுபவே" என்னும் வாக்கியத்தி னுண்மையைத் தெறறென விளக்கி நிற்கிறது.

ஸ்ரீவிவேகாநந்த ஸ்வாமிகள் எழுதிய கடிதம்.

(பிரம்மஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகள் மொழிபெயர்த்தது)

1896

வெஸ்ட்மின்ஸ்டர்,
லண்டன்.

அரிய!—

நான் ஸ்விட்ஸர்லாந்திலிருந்து திரும்பிவந்து சுமார் மூன்று வாரங்கள் ஆயின; லண்டனில் செய்யும் வேலையானது மேன்மேலும் விருத்தியாய்க் கொண்டே வருகின்றது. கேட்போரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகின்றது. அமெரிக்காவில் வேதாந்தத்தைப் பற்றியும் யோகத்தைப் பற்றியும் பிரசங்கம் செய்வதற்கும் இருபது பேர்கள் வேண்டியிருக்கிறது.......மனோபலமும் உண்மையுமுள்ள மனிதர்களாக ஒரு சிலர் கிடைப்பாரானல், ஐக்கிய நாடுகளில் பகுதி பத்து வருஷங்களுக்குள் ஜெயித்துவிடப் படக்கூடும் அவர்கள் (அத்தகைய மனிதர்கள்) எங்கேயிருக்கிறார்கள்? அங்கேயிருக்கும் நீங்கள்

எல்லோரும் வீண்பேச்சுப் பேசுபவர்களே! ஸ்வய நன்மை பிடித்த பயங்காளிகளே! உங்களுடைய தேசாபிமானம் உதடுமட்டும் தான்! உங்களுடைய மதவுணர்ச்சி வீண் தற்புகழ்ச்சி தான்!!! சென்னை வாசிகள் மற்ற மாகாணங்களில் வசிப்பவர்களைப் பார்க்கிலும் ஊக்கமும் உறுதியும் மிகுந்தவர்கள் தாம்; ஆனால் ஒவ்வொரு மூடனும் விவாகம் செய்விக்கப்பட்டிருக்கிறான்,............ கிரகஸ்த தர்மத்தைப் பற்றற்று அநுபவிக்க விரும்புவது மிகவும் நல்லது தான்; ஆனால் நாம் இப்பொழுது சென்னையில்விரும்புவது அதன்று,—வேண்டுவது விவாக மின்மையே.

எனது குழந்தையே! நான் விரும்புவது இரும்பினாலாக்கப் பெற்ற சதைகளும் எஃகினாலாக்கப் பெற்ற நரம்புகளுமாம்' இதற்குள் இருக்கும் மனமானது வஜ்ராயுத மாக்கப்பெற்ற வஸ்துவாலாக்கப்பெற்றிருக்க வேண்டும். பலம், ஆண்மை, க்ஷத்திரிய வீர்யம், பிரம்மதேஜஸ் நமது அழகிய, நம்பிக்கையுள்ள பையன்கள்—விவாக மெனப்படுகின்ற, இந்த மிருகத் தன்மையின் பலிபீடத்தில் பலியிடப்படாமலிருப்பார்களாயின், அவர்களிடத்தில் எல்லாம்இருக்கின்றன. ஏ, ஈஸ்வரா!எனது கூக்குரலைக்கேள்?சென்னை மாநகரத்தில் பொறுக்கினவர்களாக நூறு பெயர்கள், கல்வி பயின்றுள்ள வாலிபர்கள், எப்பொழுது உலகினின்றும் ஒரு புறமாக ஒதுங்கி நின்று தங்களுடைய இடுப்புகளில் கச்சைகளை வரிந்து கட்டிக்கொண்டு சத்தியத்தின் பொருட்டு யுத்தம் செய்வதற்குத் தேசத்திலிருந்து தேசம் செல்லத் தயாராயிருப்பார்களோ, அப்பொழுது தான் சென்னை விழித்துக் கொள்ளும். இந்தியாவுக்கு வெளியில் அடிக்கப்பட்ட ஒரு அடியானது உள்ளிலிருந்து அடிக்கப்பட்ட ஒரு லட்சம் அடிகளுக்குச் சமானமாகும். நல்லது ஈஸ்வர கிருபை மாத்திரம் உண்டாயின், எல்லாம் வரும்.

* * மாக்ஸ் முல்லர் ஸ்நேகம் மிகுந்து வருகிறார். நான் சீக்கிரத்தில் ஆக்ஸ் போர்ட் மாநகரத்தில் இரண்டு பிரசங்கங்கள் செய்யப்போகின்றேன்.

வேதாந்த ஞானத்தைபற்றிப் பெரிய புஸ்தகமொன்றுஎழுதுவதில் சுறுசுறுப்பாயிருக்கின்றேன். வேதாந்தத்தைப்பற்றி அதன் மூன்று தன்மைகளையும் விளக்கும்படியாக பல வேதங்களிலிருந்தும் வாக்கியங்களைச் சேகரித்துக் கொண்டிருக்கிறேன். முதலா

வது அத்வைத அபிப்பிராயத்தை யொட்டியும், பின் விசிஷ்டாத்வைத அபிப்பிராயத்தையும், துவைத அபிப்பிராயத்தையு ஒட்டியும் ஸம்ஹிதைகளிலிருந்தும், பிராஹ்மணங்களி லிருந்தும், உபநிஷத்துக்களிலிருந்தும், புராணங்களிலிருந்தும் வாக்கியங்களைச் சேகரித்துக் கொடுப்பதற்கு எவரை யாவது ஒருவரை நியமித்து எனக்கு நீங்கள் உதவி செய்யக்கூடும். அவை ஒவ்வொரு விதத்திலும் பிரிக்கப்பட்டு, புஸ்தகத்தின் பெயர், அத்தியாயம் முதலாக மிகவும் தெளிவாக எழுதப்பட வேண்டும். புஸ்தக ரூபத்தில் ஞான விஷயமாக ஏதேனும் கொடுக்காமல், மேனுட்டை விட்டு விட்டுவருவது பரிதாபகாமான கார்யம்.

நூற்றெட்டு உபநிஷத்துக்களையும் சேர்த்து ஒரு புஸ்தகம் மைசூரில் தமிழ் அட்சரத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது; நான் பண்டிதர் தியூஸனுடைய புத்தகசாலையிற் பார்த்தேன். தேவநாகரி யட்சரத்தில் அதுவு அச்சிடப்பட்டிருக்கின்றதா? அப்படியாயின், எனக்கு ஒரு பிரதி யனுப்புங்கள். இல்லாவிட்டால், தமிழ்ப் பதிப்பையும், நான் தமிழ்ப் பாஷைகற்றுக்கொள்ளும்படியாக தமிழ் எழுத்துக்களையும் அவற்றிற்குப் பக்கத்தில் சமடைச்சரிப்பையுடைய நாகரி அட்சரங்களையும் ஒரு காகிதத்தில் எழுதியனுப்புங்கள்.

* * சென்னையில் முக்கிய ஆங்கிலோ இந்தியப் பத்திரிகையாகிய "மதராஸ் மெயில்" பத்திரிகையில் ராஜயோகம் என்ற எனது புஸ்தகத்தைப்பற்றி யநுகூலமான அபிப்பிராய மிருந்ததாக லண்டனில் நான் அன்றொரு நாள் சந்தித்த சத்தியநாதன் சொன்னார். அமெரிக்காவில் சரீர பரிசீலன சாஸ்திரிகளுள் பிரதானியாயுள்ளவர் எனது சிந்தனைகளில் மயங்கி விட்டதாக நான் கேள்விப்படுகிறேன். ஆனால் எனது எண்ணங்களைப் பரிகாசம் செய்கிறவர்களாக இங்கிலாந்தில் சிலர் இருக்கின்றார்கள். நல்லது, எனது சிந்தனைகளெல்லாம் வாஸ்தவமாகவே பயங்கரமாகத் தீரம் மிகுந்திருக்கின்றன. அவற்றில் பெரும்பான்மையும் எப்பொழுதும் விளங்காமலேயிருந்து விடும். ஆனால் அதிலுள்ள சில குறிப்புக்களைச் சரீர பரிசீலன சாஸ்திரிகள் சீக்கிரத்தில் எடுத்துக் கைபாளுதல் நலம். ஆயினும், கிடைத்த பயனில் நான் மிகுந்த திருப்தியடைந்தவனுயிருக்கின்றேன். "அவர்கள் என்னைப் பற்றிக்

கெடுதலாகப் பேசினாலும் பேசட்டும், ஆனாலும் அவர்கள் பேசட்டும்" இதுவே எனது கொள்கை.

● * எனது தீரமுள்ள வாலிபர்களே! இடைவிடாது முயற்சி செய்யுங்கள். நாம் இப்பொழுது தான் ஆரம்பித்திருக்கிறோம். ஒரு பொழுதும் வக்கம் அடையாதீர்கள். போதுமென்று ஒரு பொழுதும் சொல்லாதீர்கள். ஒரு மனிதன் மேனாட்டிற்கு வந்து வெவ்வேறு வித ஜனசமுகங்களைப் பார்த்தவுடனே, அவனுடைய கண்கள் திறக்கின்றன. பலமுள்ள வேலையாளர்கள் இவ்விதமாக எனக்குக் கிடைக்கின்றார்கள். பேச்சினாலன்று, ஆனால், இந்தியாவில் நம்மிடத்தில் யாது இருக்கின்றது? யாது இல்லை? என்பதை அநுபவ பூர்கமாகக் காண்பிப்பதினாலேயே. ஒரு பத்து லட்சம் ஹிந்துக்களாவது உலகம் முழுதும் பிரயாணம் செய்யவேண்டுமென்று நான் விரும்புகிறேன்!

எப்பொழுதும் உங்களிடத்தில் அன்புள்ள

விவேகாநந்தர்.

பிழை யகற்றும் வழி:

(ஸ்ரீ ஆர்—எஸ்—கங்கா ஜடேச சர்மா அவர்கள்.)

" வருமுன்னர் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக்கெடும்." (குறள்)

நமக்கு இமைப்பொழுதேனும், செய்கைகளில் இருந்து ஒழிந்திருக்க வியலாது; செய்கைகளைக் கொண்டன்றி நமது கடமைகளைக் கைகொள்ள முடியாது. நாம் நமது கடமைகளை நேரே செய்து வரக்கூடுமானால், இம்மையிலாவது, அல்லது மறுமையிலாவது இன்பத்தை யடைவோம். மனவடக்கம், ஆறுதல், இவைகள் கிடைப்பதற்கும் ஐயமின்று.

கடவுளிடத்தும், அன்னை, தந்தைகளிடத்தும், உடன்பிறந்தாரிடத்தும், மற்றுமுள்ள உற்றுருறவினரிடத்தும், உலகில் பொதுவிலும் இல்லாளிடத்தும், மக்களிடத்தும், நாம் செய்து தீர்க்கவேண்டிய இன்றியமையாத செய்கைகளை நேரே நடத்த எல்லா மனிதராலுமியலாது. நாம் நமது கடமைகளால் ஏவப்பட்டுச் செய்யுந் தொழிற்கள் நாம் அறிந்தும் அறியாமலும்,

பிறருக்கு ஏதேனுந் தீங்கு விளைவிப்பதாயிருக்கலாம்; நாம் நமது மனயாறுதலுக்கு அடிமைப்பட்டு, பல அறிவிலாத தொழில்களைச் செய்திருக்கலாம்; நாம் பிறருடைய நன்மையைக் கருதி யியற்றுஞ் செய்கைகள் நமது பழக்கக் குறைவினாலும், அறிவின் குறைவினாலும், அவருக்கோ மற்றும், பிறருக்கோ துன்பமாய் மாறக்கூடும்.

அவ்விதமானால் நமது கடமைகளை நேரே நிறைவேற்றி அதனாலடைய விருக்கும் இன்பத்தையும், அடைதலியலாது. இவ்விதமுள்ள செய்கைகளையே "பிழை" அல்லது "குற்றம்" என்று அறிந்து கொள்ள வேண்டும். நினைப்பினாலாவது, மொழியினாலாவது செய்கைகளினாலாவது, நாம் தீச்செயல்புரியும்படியாய் நேர்ந்துவிடும். அனைவரும் அவர் அவர் செய்துள்ள செய்கைகளையும், அவற்றின் பயனையும், சீர்தூக்கியும், யோஜித்தும், பார்ப்பார்களாயின், பிழையியற்றாதிருத்தல் மிகவும் அரிதென நன்குபுலப்பட்டுவிடும்.

பிறருக்குக் குற்றம், அல்லது வெறுப்பை உண்டாக்குஞ்செய்கையை மனத்தால் நினைத்தால், மனத்தினாற் குற்றஞ் செய்தவராவோம். மனம் அடிக்கடி மாறும் இயல்புடையது. ஒரு நாளுஞ் செய்கையின்றிச் சும்மாயிராது. நினைத்தற்கு நல்விஷயங்களைக் கொடுக்காவிடிற் பிழையான நினைப்புக்களுக்கு மனம் நழுவிவிடும். பொறிகளை படக்காவிடில் மனம் பல தீய நினைப்புக்கட்குப் பிறப்பிடமாகும்.

அதுபோலவே மொழியினாலும், நாம் குற்றஞ் செய்கின்றோம். வீண் குற்றங் கூறுதலோ, பொய் சொல்லுதலோ, பிறர் மனம் புண்படப் பேசுவதோ, முன் யோஜனையின்றி எதையாவது வாயில் வந்தபடி தாறுமாறாய் உளறுகையோ, மற்றோ செய்வதனால் மட்டுமே தீமை உண்டாகின்றது.

செய்கையினின்று பயக்குந் தீமை ஒன்றுங்குறைந்ததன்று. ஓர் உயிரைக் கொல்வது வரையுள்ள தீமைகளை நாம் அறிந்தும் அறியாமலும் விளையாட்டாய் நமது தொழிலினாற் செய்துவிடுகின்றோம். அதனாற் குற்றம் நம்மைச் சுற்றிப் பிணைத்திருக்கின்றது. நமது ஒவ்வொரு நினைப்பினும், ஒவ்வொரு மொழியினும் ஒவ்வொரு செய்கையினும், நாம் அறிந்தும், அறியாமலும், பிழை நேர்ந்துவிடக்கூடும். யாதொரு குற்றமுமற்ற மனிதனை நாம் காண்பது மிகவு மரிது.

நாம் குற்றத்திலேயே பிறந்து, வளர்ந்து பருகி, உண்டு, கிடந்து, நடந்து, முடிவில் இறந்து விடுகிறோம் என்று கூடக் கூற லாம். குற்றமே பிறவிக்குக் காரணம்; குற்ற மற்றோர் பிறவார். நாம் குற்றஞ் செய்துள்ள (தகப்பனுல்) அன்னை வயிற்றில் பிறந் தோம். நமது வளர்ச்சிக் கின்றியமையாததான உணவு குற்றத் தின் பயனுபது. இவ்வாறு உற்று நோக்குங்கால் குற்றம் நம்மைச் சுற்றி நன்முய்ப் பிணைத்திருக்கிறதென்பது தெளிவாய் விளங்கு கிறதன்றோ? நமது தோலும், இரத்தமும், மாம்சமும், எலும்பும் கூடக் குற்றமுடையதே என்றெண்ணவேண்டும்.

குற்றத்தின் பயன் துன்பமே. நாம் குற்ற மற்றவரெனின், நமக்குத் துன்பமுமில்லை. நாம் துன்பத்தினிடையில் உள்ளவரை யில் குற்றமுள்ளவர் என்பதிலையமில்லை. குற்றமின்றேல் துன்ப மென்ற பெயரே யொழிந்து போய்விடும். குற்றமென்பது கட வுள் கட்டளையை மீறுவது என்னலாமென்று சிலர் நினைக்கிறார் கள். எவ்வுயிரையுந் துன்புறுத்தாதே, கொலைபுரியாதே என்பது போன்ற பல கட்டளைகள் கடவுளுடையவை; அவற்றை மீறிடிற் குற்றம் வந்துசேரும்; எவ்வுயிரையும் வருத்துவதால் குற்றம்,என் பது முதலியவற்றாற் குற்றத்தை விவரித்துப் புகல்கின்றார்கள்.

"எவ்வுயிரும் பராபரன் ஸந்நிதியதாகும்; இலங்கு......— அனைத்துமீசன்கோவில்" அஃது எவ்வாறாயினும் நம்மையும் படை த்ததில் கடவுளுக்குக் கருத்தில்லை யென்பதில்லை. கடவுளது கருத்துக்கள் இயற்கையிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கின் றன. அதனைத் தடுக்குஞ் செய்கைகளைக் குற்றமா யெண்ண வேண்டும். குற்றத்தின் பயன் துன்பமே. எவ்விதத்திலுங் குற்ற முள்ள செயல்கள் நமக்குத் துன்பத்தையே அளிக்கும். தமது உடலுக்கொவ்வாத வுணவருந்தினல் நோய் உண்டாவதுபோலக் குற்றத்தினல் நமக்குத் துன்பமுண்டாகிறது. தீயவர்கள் பலரது சரித்திரங்களை நோக்கினல், இவை தெற்றென விளங்கும். திற்க, நமது குற்றமகல,நன்மை புரிந்தாற்போதுமோ? ஒருவரிடத்து ஒரு பொருளைத்திருடி, மற்றொருவர்க் கீந்தாற் பயனுண்டோ? இவ் வித நினைப்பில் நாம் (மனங்) கலங்காதிருக்க வியலாது. நாம் செய்த தீச்செய்கையின் பயனை நாம் அடைந்தே தீரவேண்டியது. இதிலொரு சிறிதுமையமில்லை. அத்துன்பத்தை நமக்காக மற் றொருவரும் அடைய வியலாது. நாம் வழிபறிந்து முயன்று

லன்றி, பிறாது எந்த உபாயத்திஞலும், நமது குற்றம் மாறவும் அழியவும் செய்யாது.

பிழை யகலும் வழி பிழை செய்யாதிருத்தலே. குற்றமான நினைப்பில், நம் உளம் செல்லாதிருந்தால் மட்டும் நமது மனத்திற்கு மிகுந்த ஆறுதலுண்டு. மனதன்றே நம்மைக்குற்றத்திற்கு ஏவுகின்றது; அம்மனத்தைத் தூயதாக்குக! மனத்தில் அழுக்குப் பற்ருமற் பாதுகாத்திடுக! தீய செயல்களையும், அதனல் வருந் துன்பங்களையும் உற்று நோக்கிக் குற்றமற்ற நினைவுகளைக் கைக்கொள்க! நாம் பிறருக்குச் செய்யும் தீமைகளைப் பிறர் நமக்குச் செய்தால், எவ்வாறிருக்கு மென்பதை உற்று நோக்குக! தீய செயல்களைச் செய்வதில் நம்மனத்தை எவாதிருக்குமாறு, எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்க! நமது மன வழுக்கை நீக்க வேண்டி யெப்பொழுதும், "எல்லாப்பிழையும் பொறுத்தருள்வா யிறைவா!" எனவேண்டுக! கடவுளது பெருமையை அடிக்கடி மனத்தில் நினைத்து அறிவைத் தெளிவாக்கிக்கொள்ளுக! இவற்ருலன்றித் தீமையகலும் வழி மற்றென்றுமில்லை. என்ன நன்மை புரியினும், எத்தனை ஏழைகளுக் கன்னமிட்டாலும், எவ்வளவு வேள்விகள், தானதர்மங்கள் செய்பினும், நமது பிழை நம்மைவிட்டு நீங்காது. இதற்கு மேலான நூற்களில் முதன்மையானது "ஸ்ரீமத் பகவத்கீதை" என்பது. இதிற்குற்றத்தினின்று நீங்க விரும்பிய நிகாற்ற வில்லாளியாகிய அர்ஜுனனுக்கு லீலாமானுஷ விக்ரஹரான ஸ்ரீக்ருஷ்ண பகவானல், அருளப்பட்டுள்ள உபதேசங்களைப் போல் மற்றென்னூலினுங் காண்டலரிது. அது நிகரற்ற பிரஹ்மவித்தையும், யோகசாஸ்திரமுமாகும்.

இவ்வாறெப்புபர்வற்ற நூலில், "எப்பொழுதுங் கடவுளது பெருமையை யறிந்து, அவரை நினைத்துப் போற்றலும், எல்லாச் செயல் (இன்பதுன்பம், நன்மை தீமை)களையும் இறைவன் கண் ஒப்புவித்தலும், (எப்பயனையும் விரும்பாதிருத்தலும்), யாதொரு பற்றுமின்றி இறைவனைச் சரணடைதலும், பிழைபகற்றும் வழி" யென ஸ்ரீ க்ருஷ்ண பகவான் கூறியுள்ளார்.

மனதைத் தூயதாக்கும் சில மந்த்ரங்களுமுண்டு. அவற்றுள் முதன்மையானது "ஸ்ரீ காயத்ரீ" யெனப்படும். அதனலேயே மறைகளில் காயத்ரீக்கு எவ்வளவோ பெருமைகள் கூறப்படுகின்றன; காயத்ரீ ஒப்புயர் வற்ற மஹாமந்த்ரம். இவ்வளவு மேலான பெருமை தங்கிய காயத்ரீயின் பொருளை யறியாமல் நாள்தோறு

மிதனை ஆயிரக்கணக்கானமுறை உரைத்துவிட்டதனால் மட்டும் யாதொரு பயனையு மளித்துவிடாது. மந்த்ரத்தை நாவினாலுரைப்பது மட்டும் போதாது. இம்மொழியால் என்ன பொருள் விளங்குகின்றதோ அப்பொருளை மனமும் நாடவேண்டும். மந்த்ரம் வழி காட்டியாயிருக்குமேயன்றி மனத்தாற் கடவுளைத் துதித்தல் இன்றியமையாதது. இவ்விதஞ் செய்வதால் நமது மனம் தூயதாகும். மனத்தில் குற்றங்களின் விதைகள் அற்றுப்போய் விடும். (பிழைகள் ஆணிவேருடன் பிடுங்கி யெறியப்பட்டுவிடும்), மனம் அழுக்கற்றதாகும். தீய நினைப்புகட்கும், தீய மொழிகட்கும், தீய செய்கைகட்கும் நாம் உட்படுவதை யெப்பொழுது - ஒழித்துவிட்டோமோ, அப்பொழுதே நமது குற்றங்களெல்லாம் நீங்கிவிட்டனவென நிச்சயமாய்க் கூறலாம். மனவழுக்ககல மற்றும் சில மந்திரங்களு முள்ளன.

குற்றங்களி லிருந்து விடுபடப் பலவழிகளுண்டெனினும், அவற்றுளெல்லாம் முதன்மையானது பரம்பொருளை நினைந்து மந்த்ரங்களாலும், ஸ்தோத்ரங்களாலும், நமது விருப்பங்களை விண்ணப்பித்துக் கொள்வதே.

“ ஆடியும் பாடியு மழுது மரற்றியும்
தேடியுங் கண்டேன் சிவன்பெருந் தன்மையை
கூடியவாறே குறியாக்குறி தந்தென்
னூடுநின்று னவன் றன்னரு ளுற்றே”

(திருமந்திரம்)

மனத்தை மாறுதல்களி னின்று ஒழித்து (ஒரே நிலையில் நிறுத்தி) விடப்பலவேறு வழிகளுமுண்டு; நல்லோர்களது சேர்க்கையாலும் மனம் ஆறுதலடையும். பெரியோர்கள் இணக்கம், அவர்களுடன் உரையாடல் என்றும், குற்றமற்ற நல்வினைகளின் சேர்க்கை யென்று பொருள்படும்.

“நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவுநன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றேயவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று”

நமது மனதில் நல்லெண்ணங்களைத் தோன்றச் செய்யும் நூல்களும் மனவழுக்ககற்றும்.

நாம் மனத்திற்கு மேற்சொல்லியவாறு நல்ல வேலைகளைக் கொடுத்தால் மனமானது குற்றமான வழியிற்செல்ல இடமிராது.

(அதனால் மனம் மாசற்று விளங்கும்; குற்றமணுகாது.) எல்லாம் கடவுளது அருளாற்கிட்டும். கடவுளது பெயர்களைச் சொல்லிப் போற்றலும், துதித்து வழிபடலும், கடவுளிடத்து நம்மைபளித்து விடுவதால் அதுவும், மனதிற்றீமை யணுகவொட்டாது காக்கின்றன.

அவ்விதமின்றிக் கடவுள் நமது துதிகளுக்காக விரும்பி நம்மைக் காக்கிறார் என்று செருக்குறுதல் கடவுளது பெருமையை அறியாதார் மூடச்செய்கையே.

வ்ரதங்களும் நமது மனதைக் கடவுளிடத்துச் செலுத்திக் கடவுளது அருளை யளிப்பதென்பதும் நிச்சயமே. உடலது வல்லமை குறையும்போது, மனதின் வல்லமையுங் குறைந்து (மனமடங்கி, ஒரு நிலைப்பட்டு) கடவுளிடத்து மட்டும் செல்லுமேயன்றி, மனம் தீயவழிகளிற் செல்லாதிருக்கும்.

நாம் எவ்வழியைக் கைகொண்டாலும், நாம் செய்துள்ள பிழைகளினின்றும், விடுபடக் "கடவுள் அருளே!" இன்றியமையாதது. ஆதலின் அதனையடைய நாமனைவரும் எப்பாடுபட்டேனும், முயலவேண்டும்.

மந்த்ரங்களினாலும், ஸ்தோத்ரங்களினாலும், மனத்தினாலேயே, கடவுளிடத்து நமது வேண்டுகோளை, யறிவித்துக்கொள்ள வேண்டும். கடவுளை யறிந்து போற்ற, மன, மொழி, மெய்யென்னும் முக்கரணங்களாலும், வருந்தி முயலவேண்டும். முயன்றாலடையு முடியாததெதுவுமில்லை. முயன்றாற் கடவுளைக் காணவுங் கூடும். மெய்ப்பொருளை யறிந்தாலன்றி, மனம் அழுக்கற்று விளக்குதல் அரிது. மெய்ப்பொருளை நாடி எங்குந்தேடி விரைந்து ஓடிக்கண்டு கூடிக்களிக்கும் மனிதரிடம், குற்றமுள்ள எப்பொருளும் கிட்டநாடாது, தீமைபணுகாது. கடவுளருள் பெற்றால் எல்லாப் பிழைகளும் அகன்றுவிடும்! பிழையகன்றால் இணையற்ற பேரின்பமெய்தலாம்!!

"விளக்கினை யேற்றி வெளியை யறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே"

(திருமந்திரம்.)

பழிக்குப் பழிவாங்கிய பெண்மணி.

நமது தேசத்தைக் கொஞ்சநாட்கள் மகம்மதியர்கள் அரசாட்சிபுரிந்து வந்தார்களல்லவா? அக்காலத்தில் ஸிந்து தேசத்தில் ஆமத்ஷா வென்பவன் நவாப்பாக விருந்தான். இவன் மிகவும் கர்வம் படைத்தவன்; ஆனால் மிகப்பலசாலி; அழகு மிகுந்தவன்; யுத்ததந்திரங்களில் திறமைவாய்ந்தவன்; காவியம், சிற்பம் முதலிய சாஸ்திரங்களை அபிமானித்து ஆதரித்துவந்தான். இவன் ஒருசமயத்தில் கோடை காலத்தின் உஷ்ணம் பொறுக்க முடியாது குளிர்ச்சியாயிருக்கும்படியான பிரதேசத்தை நாடிச்சென்றான். அவ்விடத்தில் அழகிய ஏரி யொன்று தண்ணீர் நிறைந்து அதினின்றும் தென்றற் காற்றானது ஜில்லென்று கிளம்பி அவ்வேரியின் சுற்றுப்புறத்திலுள்ளவர்களைச் சுகப்படுத்தும். ஆமத்ஷா இந்த ஏரியில் ஒருநாள் தானும் தனது சில ஸ்நேகிதர்களுமாக படகுகளிலேறிக்கொண்டு நிலவு வெளிச்சத்தில் ஆநந்தமாக உலாவிக்கொண்டிருந்தான். அப்பொழுது அவனுடன் கூடச் சென்றிருந்த கவிராயர்களும் சங்கீத வித்துவான்களும் தேவகீதங்களைப் போன்ற தங்களுடைய திவ்விய சங்கீதங்களால் அவனைப் பரவசப்படுத்தி விட்டார்கள்.

அப்பொழுது ஒரு கவி, ஹிந்து மதத்தைச் சேர்ந்தவன், ஒரு ரஜபுத்திர ஸ்திரீயை வர்ணித்து ஒரு கவி பாடினான்.

கேட்டான் ஆமத்ஷா; மதிமயங்கி விட்டான். உடனே "இப்பொழுது நீ வர்ணித்த இந்த ஸ்திரீ எக்காலத்தில் இருந்தாள்?" என்று கவியைக் கேட்டான். "அவள் இப்பொழுது இருப்பவள் தான்; அவளுக்கு இன்னும் விவாகம் ஆகவில்லை" என்றான் கவி. "நல்லது, அவள் இன்னாரென்று எனக்கு நீ தெரிவித்து விடவேண்டியது; நீ வர்ணித்தபடியே அவளும் லட்சணங்களமைப் பெற்றவளாயின், அவள் எனக்கே மனைவியாதல் வேண்டும். நீ வர்ணித்துள்ளது பொய்யாமாயின், உனது தலை இரவல் தலை" யென்று ஆமத்ஷா கூற, கவி 'நான் கூறியது பொய்யன்று; ரஜபுத்திரத் தலைவர்களுள் ஒருவராய பர்வதஸிங் என்பவருடைய ஒரே குமாரியாகிய லாலாபாய் யென்னும் பெண்மணியை நான் புகழ்ந்து பாடினேன்" என்றான்.

மறுநாள் விடிந்தது. ஆமத்ஷா இராவெல்லாம் இதே நினைப்பாயிருந்து சூரியோதயத்தில் எழுந்திருந்ததும் தனது மந்திரி

ஞன் ஒருவராகிய பிராஹ்மணரை வரவழைத்துப் பர்வதஸிங்கினுடைய புத்திரியைப்பற்றியுள்ள சகல வரலாற்றையும் விசாரிக்க அவரும் கவியைப்போலவே வர்ணிக்க, ஆமத்ஷா ஆசைமிகுந்தவனாகிக் காமவெறிபிடித்து அந்தப் பிராஹ்மணரைப் பர்வதஸிங்கினிடத்திற்கு அனுப்பி லாலாபாயைத் தனக்கு விவாகம் செய்து வைக்க வேண்டுமென்று கேட்டு வரும்படி யனுப்பினன். மகம்மதிய அரசாட்சியில் பிராஹ்மணன் மந்திரியாயிருந்தது ஆச்சர்யமென்று நினைக்கின்றீர்களா? வாசகர்களே! அப்படி நினைக்கவேண்டாம். மகம்மதியர்களுக்குள் அநேகமாகப் பிராஹ்மணர்கள் தாம் மந்திரிகளாயிருந்திருக்கிறார்கள். கொடுங்கோன்மையாளனென்று கூறப்பட்டுள்ள டிப்பு சுல்தானுடைய அரசாட்சியிற்கூட பிராஹ்மணனே முதல்மந்திரியாயிருந்தவர். நிற்க, நமது விஷயத்திற்கு வருவோம். பிராஹமணன் பர்வதஸிங்கினிடத்திற்குச் சென்று சொன்னார். பர்வதஸிங் பழைய கட்சியைச் சேர்ந்தவன். அக்காலத்திலும் சீர்திருத்தக் கட்சியார் உண்டு. எல்லா ஜாதியாரும் ஒன்றே, ஏகமாக விவாகம், பந்திபோஜனம் முதலியவற்றால் ஜனசமுகத்தை விருத்தி செய்ய வேண்டுமென்ற கொள்கையுடையோர் அக்காலத்திலும் இருந்தனர். இவர்கள் மகம்மதிய ராஜகுடும்பங்களுடன் விவாக முதலியன செய்துகொண்டு இக லோகத்தில் எவ்விதத் தொந்தரவுமில்லாமல் இன்பமாகக் காலம் கழித்து வந்தார்கள். ஆனல் அக்காலத்துச் சீர்திருத்தக்காரர்கள் அப்படிச் செய்து வந்ததற்கு முக்கியகாரணம் தடிமுரடர்களாகிய மகம்மதிய அரசர்களுடைய அக்கிரமங்களினின்றும் தப்பிப் பிழைக்க வெண்ணினதேயாகும்; ஆனல் தன்மானத்தை எவ்வகையிலும் காப்பாற்ற வேண்டுமென்று உறுதிகொண்ட சிலர் இந்நூதனக் கொள்கையை ஆட்சேபித்து எதிர்த்து நின்றார்கள்.

இப்படி எதிர்த்து நின்று, புராதனக் கொள்கைகளே சிரேஷ்டமென்று அவற்றையே பின்பற்றி வந்தவர்களில் ஒருவர்நமது லாலாபாயின் பிதாவாகிய பர்வதஸிங். ஆமத்ஷாவினுடைய மந்திரி பர்வதஸிங்கினிடத்தில் சங்கதியைச் சொன்னவுடன், பர்வதஸிங் தான் மிகுந்த சந்தோஷமடைந்தவன்போலக் காட்டிக்கொண்டு "அதற்கென்ன? பாதுஷாவினுடைய வாக்குக்கு மறுவாக்குண்டோ? இஷ்டப்படியே எப்பொழுது வேண்டுமானலும் விவாகம் செய்து வைக்கத் தயாராயிருக்கிறேன்" என்று சொல்லி, வந்தவரை யனுப்பிவிட்டு, தனது குடும்பத்துடன் அகோரம் என்ற

தனது குன்றுக் கோட்டைக்குச் சென்று இருந்துகொண்டு அக்கிரமம் மிகுந்த ஆமத்ஷா என்ற பெயரையுடைய அற்பன் நாவின் மீது பல்போட்டு மனந்துணிந்து தன்னுடைய பெண்ணை விவாகத்திற்குக் கேட்டானென்றும், தன்னையும் தன்னுடைய பெண்ணையும் பலாத்காரமான பழிச்சொற்களினின்றும், பழிச் செய்கைகளினின்றும் ரட்சிப்பதற்கு சுத்த ராஜபுத்திர ரத்தம் சரீரத்தில் ஓடிக்கொண்டிருக்கின்ற ராஜபுத்திரன் ஒவ்வொருவனும் வரவேண்டியது ராஜபுத்திர தர்மமென்றும் கடிதங்களெழுதி தனது பந்துக்களுக்கும் ஸ்நேகிதர்களுக்கும் அனுப்பிவிட்டான். ஆமத்ஷாவின் மந்திரியினிடத்தில் பர்வதஸிங் சம்மதித்ததுபோல் பதில் அளித்தது தன்னுடைய ஜனங்களையெல்லாம் திரட்டி யுத்த ஸந்நத்தமாவதற்குள் ஆமத்ஷா திடீரென்று பெரும்படையுடன் வந்துவிட்டால் என் செய்வது? என்று நினைத்துத்தான்.

இப்படி பர்வதஸிங் படை திரட்டி எதிர்ப்பதற்குத் தயாராவதையறிந்துவிட்டான்! ஆமத்ஷா. உடனே புறப்பட்டான் பதினாயிரம் வீரர்களடங்கிய ஒரு படையுடன். சமயோசிதம்போல ராஜபுத்திரக்கோட்டையைத் தகர்ப்பதற்காயினும் சரியே, ராஜபுத்திரப்பெண்ணைமரியாதையாக இட்டு வருவதற்காயினும் சரியே, எதற்காயினும் இருக்கட்டும் என்று இப்பெரும்படையுடன் சென்றான்.

ஓரழகிய யானையின்மீது விலையுயர்ந்த ஆடையாபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட அம்பாரியில் ஆமத்ஷா அந்தஸ்துடன் வீற்றிருக்க, அவன் பக்கத்தில் இன்னொரு யானை யொன்று அதிவிசித்திரமா யலங்கரிக்கப்பட்டு லாலாபாயை இட்டு வருவதற்குத் தயாராகச் செல்ல, இவ்விதமாக ஆமத்ஷா தனது படைகளுடன் அகோர கோட்டையின் மதில்களின் அருகிற்சென்று நின்றுகொண்டு, கோட்டையின் கதவைத் திறக்கும்படி உத்தரவிட்டான். உடனே எங்கிருந்தோ ஒரு அம்பு ஆமத்ஷாவினுடைய அம்பாரியின் உச்சியில் பாய்ந்தது. அவ்வம்பில் ஓர் ஓலைச்சுருள் இருந்தது. அதில் "ஏ, மூடா! உனது அம்பாரியின் உச்சியில் பாய்கின்ற இந்த அம்பானது உனது மூளையையே துளைத்திருக்கும்; ஆனால், உன்னை இத்தடவை மன்னிக்கிறோம். ஜாக்கிரதை; உயிருடன் ஊர் போய்ச்சேர்" என்று எழுதப்பட்டிருந்தது. உடனே மகம்மதியர்கள் திடீரென்று பின்வாங்கி, தங்களுக்குச் சௌகர்யமான இடத்தில் நின்று கொண்டார்கள். அகோர கோட்டையானது நாலாபக்கங்களிலும் மகம்மதியர்களால வளையப்பெற்று பலமாக முற்றுகையிடப்பட்டது.

(இன்னும் வரும்).

சமாச்சாரக் குறிப்புகள்.

சென்ற வாரத்தில் பல இடங்களிலும் சங்கரஜயந்தி கொண்டாடப்பட்டது. இதற்கு முந்திய மாதத்தில் புத்தருடைய ஜனன தினத்தைக் குறிப்பிட்டோம். மாதந்தோறும் மகான்கள் அவதரித்துக்கொண்டேயிருந்த இடம் நமது மாதுர்ப் பூமியாகும். சாக்ஷாத்பரமேஸ்வரனே ஸ்ரீ சங்கரராக இவ்வுலகில் ஞானஸ்தாபனம் செய்வதற்கு அவதரித்தார். இவர் தமது எட்டாவது வயதில் சர்வ சங்க பரித்தியாகம் செய்து துறவுபூண்டுபோல சந்நியாசியெனப் பெயர்பெற்று பரதகண்டம் முழுதும் சஞ்சரித்து ஆங்காங்கிருந்த பண்டிதர்களுடனும் வித்துவான்களுடனும் வாதுபுரிந்து திக்கு விஜயஞ்செய்து ஞான மகிமையை நிலைநிறுத்தி ஏகமேவாத்விதியப் பிரஹ்மாறு பூதிச் செல்வராய்ச் சிறந்து விளங்கினர். இவர் இந்தியாவில் நான்கு பெரிய மடங்களை ஸ்தாபனம் செய்து தமது சிஷ்யர்களை அம்மடங்களுக்கு அதிபதிபாகப் பட்டம்கட்டி வைத்தார். அம்மடங்கள் உள்ள இடங்களாவன:—ஜகந்நாதம், ஸ்ரீருங்கேரி, த்வாரகை, பத்ரிக்காச்ரமம் இவர் தமது முப்பத்திரண்டாவதுவயதில் மகா சமாதியடைந்தார். இவருடைய நியாயங்கள் முற்கால சாஸ்திரிகளுக்கும் தற்கால சாஸ்திரிகளுக்கும் ஆச்சர்யத்தை உண்டாக்குகின்றன. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளெல்லாம் பிரமிக்கின்றன. இவருடைய ஞானோப தேசமும் வியாக்கியானங்களுமே நம்மை இதுவரைக் காத்து ரட்சித்துவருகின்றன.

* • *

யுத்தம் வரவர அதிபயங்கரமாயும் மேன்மேலும் உக்கிரமாகவே நடக்கின்றது. இரண்டு பக்கமும் சேராதிருந்த இட்டலியும் இப்பொழுது இங்கிலாந்துடன் சேர்ந்துகொண்டுவிட்டது. இந்த யுத்தம் சீக்கிரத்தில் ஓய்ந்துவிடுமென்பதற்கான அறிகுறிகள் ஒன்றும் தோன்றவில்லை. பிரான்சிலும் பெல்ஜியத்திலும் நமக்கே ஜயம்; கிழக்கிலோ, பேய்களும் பிசாசுகளும் யுத்தம் செய்வது போல இருதிறத் தவரும் போர்புரிகின்றனர். ஜெர்மனிக்கு முன்னும் அடி, பின்னும் அடி, இப்பக்கமும் அடி, அப்பக்கமும் அடி. இவ்விதமாக அடிபட்டு அல்லலுறுகின்றது. யுத்த தர்மத்திற்கு விரோதமாகவும் ஜெர்மனியர் விஷ வாயுவை உபயோகித்தும்

எதிர்ப்பதற்குச் சக்தியற்ற பெண்டுகளையும் குழந்தைகளையும்இம் சித்தும் யுத்தம் செய்கின்றனரென்று சொல்லப்படுகிறன. இது தான் ஜெர்மனியக் கல்வியா! ஆனால் இனிமேல் நெடுநாட்களுக்கு ஜெர்மனி துள்ள முடியாதென்பது நிச்சயம்.

* * *

நமது சென்னை ஹைக்கோர்ட்டில் ஜட்ஜியாகிய ஸ்ரீமான் சங்கரன் நாயர் அவர்கள் ராஜப்பிரதிநிதி யவர்களின்ராஜநிர்வாகசபையில் வித்தையிலாகா அங்கத்தினராக நியமிக்கப் பட்டாரென்று அறிந்து சந்தோஷிக்கின்றோம். நிடசித்தமும், தேசாபிமானமும், தமது மனத்திற்பட்டதைப் பயமின்றி யெடுத்துரைக்கும்தன்மையும் மிகுந்தவர் இவர் என்று எல்லோரும் அறிவார்கள். ஆதலால் இவர் ராஜப்பிரதிநிதி யவர்களின் சபையிலிருந்துகொண்டு—அதுவும் இச்சமயத்தில்—அரசாங்கத்தாருக்குத் தகுந்த யோசனைகளும் புத்திமதிகளும் கூறிப் பொது ஜனங்களுக்கும் அளவற்ற நன்மைகளைச் செய்து வைப்பாரென்று நம்புகிறோம்.

* * *

கொழும்பில் ஒரு பெருங்கலகம் உண்டாயிற்று; புத்தரது ஜனன தினத்தன்று, புத்த ஜனங்கள் தங்களுடைய பரம குருவாகிய புத்தரைமனதாறத்தொழுது குதூகலமாகக் கொண்டாடி, ஊர் வலம்வரும்பொழுது மகம்மதியர்களுடைய பள்ளிவாசல் ஒன்று குறுக்கேயிருந்துவிட்டது. ஊர்வலம் வரவேண்டிய தெருக்களில் பள்ளிவாசல்கள் இருந்துவிட்டால்,வழக்கமாக நடப்பதுயாது? கலகம்தான். தூங்குகிற அல்லாவைமேளதாளத்தினால் எழுப்பிவிடுகிறதா? இதை மகம்மதியர்கள் பொறுத்துக்கொண்டிருக்க முடியுமா? ஆகவே, கொளும்பில் கிளம்பிவிட்டது பெருங் கலகம். இரண்டு மூன்றுநாட்களுக்குஇடைவிடாதுநடந்ததுகலகம் இருபக்கத்திலுமாக சுமார் 50 பெயர்கள் வரை மாண்டனர்; 400-க்கு மேல் 500 பெயர்வரை காயமடைந்தனர். பெரிய பெரிய கட்டடங்கள் எல்லாம் இடித்துத்தள்ளப்பட்டன;எங்குப்பார்த்தாலும் ஏகமாகக் கொள்ளை நடந்தது. அரசாங்கம் ஆங்கில அரசாங்கமல்லவா? அரசாங்கத்தார் சும்மாயிருப்பார்களா ? ராணுவச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்து விட்டார்கள்; துப்பாக்கிகளினால் சுட்டார்கள். இப்பொழுது கலகத்திற்குக் காரணமாயிருந்தவர்கள் கைதிசெய்யப்படுகிறார்கள். கலகம் அடங்கிவிட்டது. பள்ளிவாசல்களைக் கார

ணமாகக் கொண்டு முண்டாதட்டுகின்ற மகம்மதியர்கள் மற்ற மதஸ்தர்களையும் தங்களுடைய சகோதரர்களாகப் பாவிக்கவேண்டும். யாக்த்திற்குக் கட்டப்பட்டிருந்த ஒரு ஆட்டை ரட்சிக்கும் நிமித்தம் தமது உயிரைக் கொடுக்கத் தயாராயிருந்த ஸ்ரீ புத்தருடைய சிஷ்யர்கள் 55 பேர் மரணமடையும் படியாக பெருங் கலகத்திற்கு இடங்கொடுத்தது வெகு ஆச்சரியமாயிருக்கின்றது.'

* * *

ஈமது மாட்சிமைதங்கிய 5-வது ஜியார்ஜ சக்காவர்த்தியவர்களின் ஜனனதினத்தன்று கௌரதாபட்டங்கள்பலருக்கும் அளிக்கப்பட்டன. இக்கௌரதாபட்டங்களைக் குறித்துநாம் அதிகமாகப்பேசும் வழக்கம்இல்லை. ஆனல் இம்முறை நாம் பேசத்தான் வேண்டியிருக்கிறது; எனென்றால் உண்மையாகப் பொது ஜனங்களால் கௌரவிக்கப்பட்டவர்களில் இருவர் இப்பொழுது அரசாங்கத்தாராலும் கௌரவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஸ்ரீமான்காந்தியும், ஸ்ரீமான்ரவீந்திரநாத டாகூரும் ஆவார்கள். இப்படி, பொது ஜனங்களால் அபிமானிக்கப் பட்டவர்கள் அரசாங்கத்தாராலும் கௌரவிக்கப் படுவது அபூர்வம். அரசாங்கத்தார் இவர்களைக் கௌரவித்ததினால், இவர்கள் கொண்டிருக்கும் கொள்கைகளைக் கௌரவித்தவர்களாகின்றார்கள். ரவீந்திரநாதருடைய கொள்கை ஜாதியக்கல்வி; காந்தியினுடைய கொள்கை அநீதச்சட்டங்களுக்கு அடங்காது அவற்றை எதிர்க்காமல் எதிர்த்தல். இவ்விரண்டு கொள்கைகளும் கௌரவிக்கத்தக்கனவென்பதை அரசாங்கத்தாரே இப்பொழுது காட்டிவிட்டார்கள்.

புத்தகவரவு.

நைஷ்கர்ம்ய சித்தி.

சர்வதர்சனங்களுக்கும் வியாக்யானஞ் செய்த சுரேஶ்வராச்சாரியாரவர்களால் இயற்றப்பட்ட இந்நூலில் மோட்சத்திற்குக் காமம் சாதகம் அன்று என்பது நான்குஅத்தியாயங்களால் சத்தியபத்திய வடிவமாக நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இக்கிரந்தந்தான் சம்ஸ்கிருதத்திலுள்ள பஞ்சசித்திகளுள் (நைஷ்கர்ம்ய சித்தி, இஷ்டசித்தி, சுவாராஜ்ய சித்தி, அத்வைதப் பிரஹ்மசித்தி, அத்வைதசித்தி) முதன் முதல்செய்த சித்தியாம். இது சம்ஸ்கிருதத்தில் மிகு பிரசித்தமும் கம்பீரமுமானதாம். இதன் அருமையைநோக்கி, இது தமிழ்மக்கட் குபயோகமாமாறு ஸ்ரீ கோவிலூர் காசிகானந்த சுவாமிகளால் வசனவடிவமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. இதுகாறும் தமிழில் வெளிவந்திருக்கும் விசாரசாகர முதலிய லட்சண கிரந்தங்கட்கெல்லாம் இதுவே மூலமாம். இது சென்னை, லோகோபகாரி ஆபீசில் கிடைக்கும். விலை அணு எட்டு.

தேவை! தேவை!!

"ஞானபாநு" சஞ்சிகையின் முதலாவது தொகுதியில் மூன்றாவது பகுதி—அதாவது பிரமாதீச வருஷத்து ஆனிமாதத்துப் பத்திரிகை—அனுப்பிக்கொடுப்போருக்கு ஸ்ரீ சுப்பிரமணியசிவம் எழுதியுள்ள ஞானரத்தினம் என்னும் புத்தகமாவது ஸ்ரீ குமுதவல்லி-திருமங்கை யாழ்வார் சரித்திரமாவது விலையின்றி, தபாற்செலவுகூட இன்றி அனுப்பப்படும். மேற்படி பத்திரிகையை அனுப்பிக் கொடுக்கும் பொழுது, மேற்கூறப்பட்டுள்ள இரண்டு புத்தகங்களில் இன்ன புத்தகம் வேண்டுமென்று எழுதுங்கள்.

காரியஸ்தர்,
"ஞானபாநு"
மைலாப்பூர், சென்னை.

நம்மிடத்தில் விற்பனைக்குத் தயாராயிருக்கும்புஸ்தகங்கள்.

1. ஞான ரத்தினம்:—வேதாந்த ஞானத்தைப்பற்றிச் சிலசிந்தனைக்கட்டுரைகளடங்கிய நூல். ஸ்ரீ சுப்பிரமணிய சிவம் தமது சிறைவாச காலத்தில் எழுதியது. அப்பொழுது ஆசிரியர் பெற்றிருந்த மனோ அமைதியை இந்நூல் நன்கு தெரிவிக்கின்றது.

விலை அணா நான்கு.

2. பகவத்கீதா சங்கிரகம்:—பகவத்கீதை யென்னும் அரிய நூலின் ரத்னச்சுருக்கம். தெளிவான தமிழில் எழுதப்பட்டுள்ளது. இரண்டாம் பதிப்பு விலை அணா 2.

3 நளின சுந்தரி அல்லது நாகரிக நடப்புடல்:—ஓர் புதிய நவீனகம்:— விலை அணா எட்டு.

இம்மூன்று புத்தகங்களும் அணா பன்னிரண்டுக்குக் கொடுக்கப்படும். தபாற்கூலி வேறு.

4. பாஞ்சாலிசபதம்:—ஒரு புதிய தமிழ்க் காவியம். பிரம்ஸ்ரீ ஸி-சுப்பிரமணிய பாரதியவர்கள் இயற்றியது. இனிய நடையில் எழுதப்பெற்றுள்ளது. சந்தங்கள் எளிதாக் கிரகிக்கத்தக்கன.

விலை அணா எட்டு-தபாற்கூலி வேறு.

திருக்குறள்-பரிமேலழகர் உரை, தெளிபொருள் விளக்கம், கருத்துரை, குறிப்புரை. 1300 பக்கங்களுக்கு மேற்பட்டது. இரண்டுபாகமாக விருப்பது ரூபாய்	6	0
தர்க்கபரிபாஷை ,,	1	0
ரிபுகீதைத் திரட்டு ,,	1	0
நைஷ்கர்மிய சித்தி ,,	0	8
வியாசதாத்பர்ய நிர்ணயம்	0	8
நாநா ஜீவவாதக் கட்டளை குறிப்புரையுடன்-இரண்டாவதுபதிப்பு	0	4
ஸ்ரீ அத்வைதார்த்தப்பிரகாசிகை யென்னும் ஸ்ரீ சங்கரத்துவேஷியரின் வாய்ப்பூட்டு	0	6
அறிவானந்த சித்தி	0	4
விவேகானந்தர் ஞானத்திரட்டு	1	0
திருக்குத்திரிசிய விவேகம்	0	2
விவேக சூடாமணி	0	8
சூதசங்கிதை-சாராம்ச வசனம்	ரூ.1	0
பண்டலப் பிராமணோபநிஷத்தும் ராஜயோக பாஷ்யமும்	0	4
விருத்திரத்நாவலி	0	12
ஆநந்த ராமாயணம்	5	0
வேதாந்தசாராமிருதமும் அத்துவிதாசமஞ்சரியும்	0	6
வேதாந்தக் கிரிமினல் கேஸ்	I	8
தேவ்லோகக்கிரிமினல் கேஸ்	1	8
ஸ்ரீவிவேகாநந்த விஜயம்	1	8
ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயம்	1	4
சர்வ தரிசன சங்கிரகம்	2	8
பெருந்திரட்டு	3	0
சிவமகிதம்நஸ் தோத்திரம்	0	1
மனன மாலை	0	2
பாலபோதம்	1	0
வேதாந்தசாஸ்திரத்னவலி	1	0
திருவாசகம் (பாக்கெட் ஸைசஸ்)	0	10
வேதாந்தசாரம்-வசனம்	0	10
வியாசபோதினி ரூபாய்	0	5
பாகவதத்திரட்டு	0	6
கைவல்லியநவநீதம்மூலம் பாக்கெட் சைஸ்	0	3
கதா சரித் சாகம் முதல் பாகம்	1	4
கோமளம் காஞ்சியாத்திரை "தாமரைப் பெண்"	0	8
பிரேமகாந்தன்	0	12
ஸ்ரீசங்கராசார்ய நீலகாண்டாசார்ய சம்வாதம்	0	4
காதலர் கண்கள்	0	12
முரளீதரன்	0	10
ஸ்ரீ குமுதவல்லி, திருமங்கை மன்னன்	0	8
ராஜப்பிரபா	0	6
பரிணய மீமாம்சம்(சம்ஸ்கிருதத்தில்)	0	12
தருக்காமிர்தமும் பிரஸ்தான பேதமும்	0	8
பிரஹ்மாநந்தலஹரி	0	1
வேதாந்த டிண்டிமம்	0	4
இராமோதந்தம்	0	2
கீசகன் அல்லது கற்பின் வெற்றி	0	8
பரதன்	0	5
கல்யாணி	0	8
கருநாடக யோகினி ஜாலக்கதை	0	4
சுகதேவி	0	8
கிருஷ்ணவேணி	0	12
லீனு	0	4
மஸ்தான்சாகிபு திருப்பாடற்றிரட்டு	2	0
வேதாந்த சித்தாந்த சாரசங்கிரகம்	0	8
நவநீதசாரம்	0	8
பாட்டியற்கொத்து	0	6
தோடகம்	0	4
வேதாந்பரி பாஷை	0	10
சித்தாந்தபித்து	0	8

வாசகர்கள் கவனிக்க.

இம்மாதத்தில் நமக்கு நேரிட்ட சில எதிர்பாராத அசந்தர்ப்பங்களாலும், அவ்வசந்தர்ப்பங்களால் நேரிட்ட தாமதத்தினுலும் இப்பத்திரிகையில் படம் சேர்க்க வியலாது போயிற்று. வாசகர்கள் மன்னிப்பார்களென்று நம்புகிறோம்.

"ஞானபாநு"

ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

பத்திராதிபர்—ஸ்ரீ சுப்பிரமணிய சிவம்.

சென்ற இரண்டு வருடங்கட்கு மேலாகச் செவ்வனே நடைபெற்று வருகின்றது. பண்டிதர், பாமரர், சகலரும் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் இகலோக, பரலோக சாதனங்களைப் பற்றியுள்ள எல்லாவிஷயங்களைக் குறித்தும் பல பண்டிதர்களும் தேசாபிமானிகளும் விஷயதானம் செய்துவருகிறார்கள். உறங்கிக்கிடக்கும் தமிழ் ஜாதியாரை அறிவாகிற சாட்டையாலடித்து எழுப்பி அவர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணி அவர்களை முன்னிலையிற் கொண்டு வரவேண்டுமென்பதே இப்பத்திரிகையின் நோக்கம். வருஷ சந்தா ரூபாய் 1-12-0. அந்நியநாடுகளுக்கு வருஷ சந்தா ரூபா. 2-4-0. பினங்கு, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா முதலிய அந்நியநாடுகளிலும் ஏராளமாகச் சந்தாதாரர்கள் இருக்கிறார்கள். விளம்பரம் செய்வதற்கு இதுபோன்ற பத்திரிகை வேறு கிடையாது.

காரியஸ்தர்,
"ஞானபாநு"
மைலாப்பூர், சென்னை.

சர்வம் பிரஹ்மமயம்.

ஜகத் ஜீவன்களே மனோமயக்கம்.

இதைத் தெளிவிக்க ஒருவராலு மாகாது.

கருணைப் பிரவாகநிதி வைத்தியசாலை

டி. என். தீர்த்தகிரி முதலியாரவர்கள், அன்னசாகரம்.

உண்மை வாக்கு.

மனோ உண்மையுள்ள நேயர்களே! சில கேட்லாக்குகளுடைய வார்த்தைகளை நம்பிப் பலவித மோசமாகி, நம்முடைய மருந்துகளை அருந்துபவர் அனைவரும் வற்புறுத்தியதால் வெளியிடத் துணிந்தேன்.

கெர்ப்ப விருத்தி யெண்ணெய்.

இந்த எண்ணெயானது ஆறுவிதமான மலட்டுக்களையும் போக்கி அதிக விரைவில் சந்தான விருத்தியை உண்டாக்கத்தேவாமிருதம் போன்றதும், கெர்ப்ப கிருமிகளுக்கு அதிக பலத்தைத் தந்து, சுக்கிலத்தை உடனே கர்ப்ப ஸ்தானத்தில் நிறுத்தி ஆகரிக்கும் தன்மையும், ஒழுங்கீனமான ஸ்திரீகளின் ஒழுக்கங்களை கிரமப்படுத்துதலும், அதினாலாகிய வயிற்றுவலியையும் அசதி கெர்ப்பங்களையும் சூதக வாயுவையும் கண்டித்துச் சரியான நிலைமையில் கொண்டு வந்துவிடும் திறமையுமுடையது. உபயோகித்தவர்களிடமிருந்து நற்சாட்சிப் பத்திரங்கள் கிடைத்திருக்கின்றன.

4 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூபாய்	5	0	0
2	2	12	0

மகா மேக ராஜாங்கத் தெண்ணெய்.

இந்த எண்ணெயானது 150 வித மூலிகைகளும் 100 விதமான வேர்களும் இன்னும் விலையுயர்ந்த 190 சரக்குகளும் சேர்த்துத் தயாரிக்கப்பட்டு அநேக காலமாக விற்பனையில் இருக்கிறது. இதன்குணம் கிரந்தி, அரையாப்பு, சூலை, விப்புருதி, கண்டமாலை, மேகதளும்பு, புரையோடுகிற ரணம், மேக உஷ்ணம், பாண்டு, சோகை, பவித்திரம், மண்டை சூலை, இன்னும் மேகத்தில் சம்பந்தமான அநேக வியாதிகளையும் கண்டிக்கத்தடையில்லை. இந்த எண்ணெயைச் சாப்பிட்டுத் தீராதபட்சத்தில் இதன் கிரயம்வாப்சு கொடுக்கப்படும். இவ்விடம் வந்தால், சௌக்கியமான பிற்பாடு தான் சார்ஜ் வாங்கப்படும்.

5 அவுன்ஸ் உள்ள புட்டி 1-க்கு ரூபா	10	0	0
$2\frac{1}{2}$ அவுன்ஸ்	5	4	0

முசாம்பர மெழுகு.

இந்த மெழுகால் 13 வித ஜென்னிகளையும் சீதளத்தினால் முயல்கண்ட வலிப்பு, காக்கைவலி, குமரிகண்டம், குதிரை வலி, நீடித்த நாளாகி அமாவாசை, பௌர்ணமிகளில் வரும் இசிப்புக்களையும் நிவிர்த்தி ஆக்கி அநேகர் அநுபவித்திருக்கிறார்கள்.

ஒருதோலா விலை ரூபாய்	5	0	0
½	2	12	0

காலரா என்னும் விஷபேதி மாத்திரை.

இந்த மாத்திரையின் குணம் அநேகமிருப்பதால் கடிதமெழுதினால் விவரங்கள் தெரிவிக்கப்படும். இந்த மாத்திரையினால் அநேக காலரா கேஸ்கள் நிவிர்த்திக்கப்பட்டிருக்கின்றன. இதைப் பற்றி எழுதினால் மட்டும் தெரியும். பன்னிரண்டு மாத்திரையே உபயோகம். இந்த மாத்திரையினால் குணமாகாவிட்டால் பணம் வாப்ஸ் செய்யப்படும். இவ்விடம் அனுப்பினாலும் என்னை வரவழைத்தாலும் குணப்படுத்தத் தயாராயிருக்கிறேன்.

12 மாத்திரைகளின் விலை ரூபாய் 2 0 0

தாருட்டியை பற்றி.

யூனானி முறையின்படி அநேகவித ஔஷதங்கள் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன. கடிதம் எழுதினால், தேக நிலைமைக்குத் தக்க பிரகாரம் மருந்தும் அதன் விலையும் தெரிவிக்கப்படும்.

இன்னும் அநேகவித லேஹ்பம், கிருதங்கள், தைலம், சாபத்துகள், மாத்திரைகள், திராவகங்கள், சூரணங்கள், பற்பங்கள், செந்தூரங்கள், பற்பொடி முதலியனவும் அனுப்பப்படும். வயதும், தேகநிலைமையும் பூரா விலாசமும் தெரிவிக்க வேண்டும்.

ஏழைகளுக்கு எவ்விதமான நோயாயினும் சார்ஜ் இல்லாமல் மருந்து கொடுக்கப்படும்.

காலை 7 மணி முதல் 9 மணி வரையிலும்
மாலை 3 மணி முதல் 5 மணி வரையிலும் கொடுக்கப்படும்.

விலாசம்.

டி. என். தீர்த்தகிரி முதலியார், நேட்டிவ் டாக்டர்.

அன்னசாகரம், தர்மபுரி தாலூகா.



ஸ்ரீ கிருஷ்ணனது காளிங்க நிர்த்தனம்.